# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon P M G No, H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுரு] யாழ்ப்பாணம்:- கரவருஷ கார்த்திகைமீ உரு உ செவ்வாய்க்கிழமை (11 டிசம்பர் 1951) [இல - எ0]

அரசியல் அலை

## வாக்களிப்பதற்கு வல்லடி வழக்கா?

## வன்சொல் வழங்கும் அரசியல் வாதிகள்

அன்றொருகால் அரசியல் நிர்ணய விசாரணையாளர் டனமோர் குழுவினர் சர்வசன வாக்குரிமையை வழங்கினர். ஆனால் அவ்வுரிமையைத் தொழிற் கட்சித் தலைவர் திரு. குணசிங்க அல்லாது வேறு யாருமே கேட்கவில்லையென்றும் சுட்டிக் காட்டினர். இப்போது தீவிரமாகப் பொதுசன நலத்தைப் பேணப் புரண்டு உருண்டு கூக்குரலிடும் 'விடுதலை' வாதிகள் அப்போதும் அரசியலில் அமோகமாக ஈடுபட்டேயிருந்தனர். ஆனால்! சர்வசன வாக்குரிமையை மட்டும் கேட்கவில்லை. மறந்ததுபோல் நழுவ விடப் பார்த்தனர். தொழிற்கட்சித் தலைவர் குணசிங்க துணிந்து கேட்டார், அதைப் பெற்றுக் கொடுத்தார். ஆகவே உண்மையாகப் பரோபகாரப் பணி செய்தவர் திரு குணசிங்கவே.

வாக்குரிமை வழங்கப் பெற்றதும் எழுந்தனர் தலைவர்கள். 'நானுங்கூட நானுங்கூட' என்று திருவாளர் பொதுசனத்தைத் தேடிச் சினேகபான்மை காட்டினர். முதலாவது பெருந்தெரிவு வந்ததும் திரு பொதுசனத்தைப் போற்றத் தொடங்கினர், புகழ்மாலை சூட்டினர். பூவாற் பாதபூசை செய்தனர், பொழுது மறையும்மட்டுமன்று இரவு பகலாய் அவரைப் பிரியாது திரிந்தனர்.

அரசாங்கசபைத் தெரிவுகள் இரண்டாம் முறை வந்தகாலத்து வாக்குரிமை கொடுப்பதல்ல வாக்குரிமை பெறுவதைப்பற்றிய ஒழுங்குகள் சாத்திரமுறைப்படி அமைக்க அரசியலவாதிகள் திட்டம் போட்டதுமன்றி அவற்றைக் கையாண்டு நயத்தாற் பெறமுடியாவிட்டாற் பயத்தாற் கொடுக்கப் பலாத்கார முறைகளை அநுசரித்தனர்.

போற்றினும் போற்றுவர் வாக்களிக்க மறுக்கின் தூற்றினுந் தூற்றுவர். அவ்வளவோடமைந்து விட்டாற் காரியமில்லை. எதிர் மறையாயும் நேராகவும் பலவர் தப்படுத்தி மனம் ஒன்று சொல்லக் கரம் இன்னொன்று செய்யும் நிலைமையையும் ஆரம்பித்துவிட்டனர்.

---

## மதுவிலக்கில் உசன் வழிகாட்டுகின்றது

சென்ற கார்த்திகை மாதம் 17-ந் திகதி (3-12-51) திங்கட்கிழமை உசன் மதுவிலக்குச் சபையார் மதுவிலக்கு விழா நடத்தினர். அத்தருணம் நடந்த பகிரங்கக் கூட்டத்திலே இந்தஇயக்கம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னே தொடங்கி முன்னேறி வருகிறதெனச் சபைத்தலைவர் திரு. C. இராசரத்தினமவர்கள் குறிப்பிட்டார்.

உட்கப்படார் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும் [பவர்
கட்காதல் கொண்டொழுகு

என்னும் பொய்யாமொழியார் தந்த பொன்மொழியைச் சிரமேற்கொண்டு உசன் வாசிகள் செய்யும் இச்சீரிய தொண்டினை மக்கள் யாவரும் போற்றி முன்மாதிரியாகக் கொள்ள வேண்டியது.

## சாராய உற்பத்தி

1951-ம் ஆண்டு 540,000 கலன் சாராயம் உண்டாக்கப்பட்டது. அடுத்த ஆண்டு இதை இரு மடங்காக்குதற்கு உள்நாட்டு மந்திரி சபை ஒழுங்கு செய்கின்றது.

மக்கள் மது விலக்க அரசு மதுவிளைக்கின்றது!

## மட்டக்களப்பில் பெருமழை

சென்ற புதன்கிழமை மட்டக்களப்பில் புயலுடன் பெருமழை பெய்தது. கமக்கார வாட்டம் இங்கே நீங்கியது. பல இடங்களிலும் சுழிமழைக் கிடமுண்டெனக் கருதப்படுகிறது.

---

# கூட்டுறவைக் குலைக்கும் குழு அமைப்பு

## நீறு பூத்த நெருப்பு

பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாக்ஷிசுந்தரனார் M.A.,B.L.M.O.L. 'திருவள்ளுவர்' என்னும் சிறந்த திங்கள் வெளியீட்டில், கூட்டுறவின் கொள்கையை நிலைநாட்ட வள்ளுவனார் தந்த குறள்வளத்தில் ஒன்றை எடுத்து அழகாக ஆண்டதோடு பல்வேறு வகுப்பினராய், குழுவினராய்ப் பிரிந்து வாழ விரும்பும் பிரிவினைக் கட்சியாளர்களின் நோக்கம் ஆக்க முறைக்காகாதென ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார்.

முன் நாம் கண்ட உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் வெளிப்படையாகத் தோன்றுபவை. இவை மறைந்திருப்பது இல்லை. ஆனால் வேறு சில பகைகள் இவ்வாறு வெளியே புலப்படத் தோன்றாமல் நீறு பூத்த நெருப்பேபோல மறைந்து கிடப்பனவும் உள்ளன. அவையே பெருந் தீங்கு விளைப்பன. வெளிப்படை நோயினைத் தீர்ப்பது எளிது. புலப்படத் தோன்றாத நோயினை அறிவது அருமையாதலின் அதனைத் தீர்ப்பதும் அருமை. நீறுபூத்த நெருப்பு காற்றடித்ததும் பற்றி எரிந்து ஊரைச் சாம்பராக்கும் அதேபோல உட்பகைகளும் காலம்பார்த்திருந்து நாட்டினைக் கெடுத்தொழிக்கும். இவற்றினையே,

பல்குழுவும் பாழ் செய்யும்
உட்பகையும் வேந்தலைக்கும்
கொல் குறும்பும் இல்லது நாடு.

என்ற குறளில் திருவள்ளுவர் கூறுகின்றார்.

மக்கள்குடும்பம்குடும்பமாகவாழும் இயல்பினர். அவர்கள் சிறப்பு தன்னந் தனிமையில் விளங்குவதில்லை. கூட்டம் கூட்டமாக வாழும் கூட்டுறவிலேயே அவர்கள் பெருமை சிறந்தோங்குகிறது மக்கட்கு இந்தக் கூட்டுறவு உரிமை இன்றியமையாது வேண்டப்படுவது. பண்பாட்டினைப் பல பல நிலையங்களாக அன்றோ மக்கள் வளர்த்துப் போற்றிவருகின்றனர். ஊர் ஊராய் வாழ்கின்ற உரிமையும் சமுதாயத்தின் இயற்கை உரிமையாகும். நாட்டரசியலின் கடைகாலும் ஆகும். ஆனால் இந்தக் கூட்டுறவு உரிமை பிற கூட்டங்களோடு ஒத்துழைக்கவே அன்றி ஒரு கூட்டத்தோடு ஒரு கூட்டம் போராட அன்று; பொறாமைப்பட அன்று; ஒன்றை ஒன்று அழித்துப்போட அன்று; சமுதாயம் வாழவேண்டும் எனக் கூட்டுறவு உரிமை பெற்ற கூட்டங்கள் மக்கள் பல பல வகையினராய்ப் பல பல திறத்தினராய் ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று எளிது என்ற அடிப்படையில் பிரிந்து நின்று அவரவர்க்கு இயலும் வகையில் தத்தமக்கு ஏற்றவாறு நாட்டினை முன்னுக்குக் கொண்டுவராமல் பிறர்கெடுவதனையே தம் ஆக்கத்தன் அடிப்படையாகக்கொண்டால் நாடு பாழாகும். கூட்டுறவு (குழூஉ) க்குழியாகும். உயிரைக் காக்க உணவு சமைக்க வரும் நெருப்பு உயிருக்கே உலை வைத்து வீட்டினையும் ஊரையும் அழித்தகதையாக இது முடியும்.

கூட்டுறவோ ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டது. குழுவோ ஒற்றுமைக்கு மாறாக வேற்றுமையால் வரும் பன்மையையே அடிப்படையாகக் கொண்டது. இதற்கு இடம் கொடுத்தால் குழுக்கள் பல்கிப் பெருகி ஒவ்வொருவனும் தனித்தனிப் பகைத்து நிற்கின்ற நிலையில் வந்து முடியும். இந்தக் கருத்தினை வற்புறுத்தவே பல்குழு என்று சிறப்பித்துக் கூறுகின்றார் திருவள்ளுவர் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு இந்தப் பன்மை பெருநோயாகும்? பல்குழு என்பது மறப்படை மாக்கள்பெருகக் கூடும் கூட்டமே என்பர் காலிங்கர் நாட்டினைக் கெடுக்கும் உட்காலத்தில் ஈடுபட்டு வாழனேந்தும் கெடுநிலையை வற்புறுத்த இவ்வாறு காலிங்கர் கூறினாலும் இதன் நுட்பத்தினைப் பரிமேலழகரே நன்கு விளக்குகின்றார். அவர் பல்குழுவாவது சங்கேதவயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டம் என்று பொருள் கூறுகின்றார்; அதோடு நில்லாமல் சங்கேதம் சாதிபற்றியும் கடவுள்பற்றியும் பலர்க்கு உளதாம் ஒருமை என்று விளக்கவும் செய்கின்றார். மதத்தின் பேராலும் இனத்தின் பேராலும் எவ்வளவு கொலை! மதநெறி வேண்டும். அஃது ஒருவன் அகவாழ்வை வளர்ப்பது. ஆனால் மதவெறியே கொடியது. இனநெறி வேண்டும். அஃது ஒருவன் சமுதாய வாழ்வை வளர்ப்பது. ஆனால் இனவெறி கொடியது. இந்தியா துண்டாடப் பெற்றது, மதத்தினை ஒட்டியே அன்றோ! யூதர்கள் தனிநாடு நிலை நாட்டியது எந்த அடிப்படையில்? சென்ற காலத்தில் எல்லாம் மதத்தின் பேரால் போர்கள் நிகழ்ந்தன. உட் கலகங்களும் எழுந்தன. மதம் இன்னமும் பழங்கதையாகப் போய் விடவில்லை, பல பல கொள்கைகளும் இன்று மதத்தின் நிலையைக் கைப்பற்றி மக்களை மயக்கித் தமக்கு அடிமைப்படுத்துகின்றன.

இந்தகாலைய சிறப்பு இன உணர்ச்சியே ஆம். ஒவ்வோர் தேசிய இனமும் ஒவ்வோர்நாடாக அமைய

தொடர்ச்சி 4 - ம் பக்கம்

---

## கல்நெஞ்சு உருக்குங் கருணை.........

திருச்சிற்றம்பலம்

வன்னெஞ்சக் கள்வன் மனவலிய னென்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட
அன்னந் திளைக்கு மணிதில்லை யம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருச்சிற்றம்பலம்

---

## வினா விடுத்தவர் பிழைவிட்டால் விடையிறுப்பவர் என் செய்வார்?

## சிரேஷ்ட தராதரப் பரீட்சையிற் சிக்கலான நிலைமை

சிரேஷ்ட தராதரப் பரீட்சையின் (S. S. C.) விசேஷ கணக்குப் பரீட்சைக்கு வித்தியா பகுதியார் விடுத்திருந்த கேள்விப் பத்திரங்களிற் குறிப்பிட்ட 8 கணக்குகளில் 7 கணக்குகளுக்குச் சரியான விடை எழுதிய மாணவர்களுக்கு முழுப் புள்ளியுங் கொடுக்கப்படும்.

முதலாவது பத்திரத்தில் முதலாவது கேள்வியே பிழை. இரண்டாவது பத்திரத்தில் அச்சுப்பிழை குறித்த நிர்மானத்துக்கு இவையே காரணம்.

இவை, தமக்கு அறிவிக்கப்பட்டால், இக்கேள்விகளுக்கு மாணவர் விடையெழுதாவிடின் அதனால் அவர்கள் பாதிக்கப்படாதபடி செய்ய உத்தரவிட்டிருப்பதாயும் ஒரு மாணவர் எழுத முயன்று பிழையைச் சுட்டிக் காட்டினால் அதற்கு முழுப்புள்ளி கொடுக்க ஒழுங்கு செய்திருப்பதாயும் திரு. L. L. K. குணதுங்க பரீட்சை உதவிக் காரியாதிகாரி தெரிவிக்கின்றார்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கரஹூல கார்த்திகைமீ உருஉ செவ்வாய்க்கிழமை

## பாடுபடுவதற்குப் பயனில்லையா?

வேலிக் கப்பால் விழுந்த விளாம்பழம்போல விளைபொருள் உற்பத்தியாளரின் முயற்சிக்குரிய பயன் முக்காலே மூன்று வீசமும் தட்டிப் பறித்துண்ணும் முயற்சியுடைய தரகர்களுக்கே போகின்றதென்பது எவருமறிவர். நிலத்தைப் பண்படுத்தி உழுது உரமிட்டு நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த இராப்பகல் இடையறாது வேலை செய்து பயிரிட்டு அதன் பலாபலனை விற்கும் வேளையில் இடையே ஒருவர் வந்து தோற்றி இல்லாததுபொல்லாதது இயம்பி விளைந்த பொருளை விரும்பிய விலைக்கு வாங்கித் திரும்ப இருமடங்கு மும்மடங்கு இலாபத்திற்கு விற்கும் இந்த அழையா விருந்தினரின் ஆபத்தினின்றும் கமக்காரர்களைக் காப்பாற்றுவது தான் சனசமூக முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபடுகிறோமென்று பகிரங்கப்படுத்துபவர்களதும் அரசாங்கத்தினதும் முக்கியமான கடமையாகும்.

கொடுப்பவர்களும் கொள்கின்றவர்களும் கூடி ஒருவருக்கொருவர் தங்கள் நயத்தையும் சமூகத்தின் விருத்தியையும் தேசத்தின் செழிப்பையும் கருதுவார்களேயானால் இடையிலே தோன்றி இன்னல் விளைவிக்கும் இத் தரகர்மாரையெல்லாம் இருந்த இடம் தெரியாமற் கடத்தி விடலாம் என்பது கூட்டுறவு இயக்கத்தின் கொள்கையையும் நடைமுறை நயத்தையும் நன்கறிந்தவர்கள் ஒப்புக் கொள்ளாதிருக்க மாட்டார்கள். இப்பொழுது நாட்டிற் பலப்பல பாகங்களிலும் ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் நிறுவப்பெற்றுப் பயிர்ச் செய்கையாளருக்குப் பெரிதும் பயன்செய்கின்றனவெனக் கூட்டுறவுப் பகுதி அறிக்கைகளால் நாம் அறிகின்றோம்.

கூட்டுறவு இயக்கம் கொள்கை அளவில் மிகமிக மெச்சக் கூடியதாயிருந்த பொழுதிலும் அதைக் கொண்டுநடத்துபவர்களின் உள்ளக் கொள்கை உண்மையையும் உயர்ந்த இலட்சியத்தையும் உடையதாயிருந்தாலன்றிச் செவ்வனே வளர மாட்டாது. நன்னோக்கத்தோடு ஆக்கப் பெற்ற கூட்டுறவு முயற்சிகளும், அவற்றைச் செய்கைமுறையிற் கொண்டு வருபவர்கள் வேலி பயிரை மேய்ந்தவாறு தங்கள் கைகளைத் தகாத முறையில் நீட்டிப் பாவிக்கின்றமையால், சீர்குலைந்து பாழடைந்து போகின்றதைப் பல முறைகளிலும் நாம் கவனித்திருக்கின்றோம். ஆகவே கூட்டுறவுப் பணியாற்றுவோர்கள் உண்மைப் பரோபகாரச் சிந்தையுள்ளவர்களாயிருத்தல் மிகமிக அவசியம்.

எங்கள் நாட்டில் உழுதுண்டு வாழும் உயரிய கொள்கையை இக்காலத்தில் ஏற்காது இளைஞர்கள் பழுதுள்ள பணியிற் புகுவதற்கு முக்கியமான ஓர்காரணம் பயிர்ச் செய்கையாற் போதிய பயனில்லையென்றமையே. உள்ள இலாபத்தைத் தரகரேனும் கள்வர் கொள்ளைகொண்டால் பாடுபட்டவன் என்செய்வான். எனவே ஒவ்வோர் கிராமத்திலும் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் கூட்டுறவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்படல் வேண்டுமென்பதுதான் எங்கள் புத்திமதி. கிராமத் தலைவர்கள் பரோபகாரத் தொண்டர்கள் முதலியவர்களும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் இவ்விதமுயற்சியில் ஈடுபடுவார்களேயானால், நாட்டிற்கும் நாட்டினருக்கும் நற்றொண்டு புரிந்தவர்களாகக் கருதப்படுவர். அரசாங்கத்தார் இத்தகைய இயக்கத்திற்குப் பேராதரவு கொடுக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. தேவையான பணமும் உபகரணம் முதலியனவும் மிகவுங்குறைந்த விகித வட்டிக்கும் சுலபமாகத் திருப்பிக் கொடுக்கக் கூடிய காலவசதிக் கட்டுப்பாட்டுக்கும் அமைவாகக் கொடுக்கின்ற அரசாங்கத்தின் தாராளத் தன்மையைக் கமக்காரர்கள் உபயோகப்படுத்துவது மல்லாலாமல் அவ்வுதவியை நல்வழியிலமைத்து நயம் செழிக்க நன்முயற்சி செய்வார்களாக.

---

## தங்கம் வெள்ளி விநியோகம்

### தகுந்த முறையில் நடக்கும்

தங்க, வெள்ளித் தொழிலாளருக்குத் தகுந்த முறையில் தங்கம் வெள்ளி விநியோகிப்பதற்கு அரசாங்கக் கைத்தொழிற் பகுதியார் தக்க திட்டமொன்றை அமைக்கின்றனர். சுத்தமான நகைகளையே இங்கே உருவாக்கி வெளியிட வேண்டிய கட்டுப்பாட்டையும் இத் திட்டம் தருகின்றது.

இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள விலைக்குத்தக்கதாய் விலை குறிக்கப்படும்.

# இன்பத்தின் நிலை :-: இதுதானா?

> தொடர்கதை

I

முடியாது என்று சொன்னால் அவ்வளவும்தான். தட்டிப் பேசவும் எதட்டிக் கேட்கவும் வந்துவிட்டதா? இனிமேல் இந்தவிதமான விஷயத்தை என்னோடு வைத்துக் கொள்ளாதே என்று உரத்த சப்தமிட்டுக்கொண்டு அறையில் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்த சங்கரரை அப்போதுதான் உள்ளே புகுந்த பூதத்தம்பி கையிற் பிடித்துக் கதிரையில் உட்கார வைத்துத் தானும் அருகில் அமர்ந்துகொண்டு 'என்ன இவ்வளவு ஆத்திரம் நீங்கள் இருவரும் என்றும் மாறுபடா அன்றில்போன்ற அன்பாய் ஐக்கியமாய் இருந்து வந்தீர்கள். பேசினால் ஒரு குரல், நினைத்தால் ஒரு நெஞ்சம். இது பெரும் நூதனமாயிருக்கின்றதே. விஷயம் என்ன அவ்வளவு அளவு கடந்த பாரதூரமானதா? நான் அதை அறியக்கூடாதா?" என்று சொல்லிக்கொண்டு "அப்படியானாற் சொல்லுங்கள் நான் சென்றுவருகிறேன்' என்றுவிட்டுக் கதிரையைவிட்டு வெளிக் கிளம்பினார். இல்லை நீங்கள் ஏன் போக வேண்டும். உங்களுக்குச் சொல்ல முடியாதென்று ஆர் சொன்னது. உங்களுக்குச் சொல்லாது ஆருக்குத்தான் நான் சொல்லப்போகிறேன் என்று எழுந்த பூதத்தம்பியை இருத்திவிட்டுப் பின்னும் கூறுகின்றார் சங்கரர்.

#### கைகேயி நியாயம்

பாருங்கள் நான் அப்போதே கூறிவிட்டேன். பெண் பிள்ளைகள் பெண்கள் பாடசாலையிலே படிப்பதுதான்முறை. ஆண்களும் பெண்களும் ஒரு பாடசாலையிற் கல்வி கற்பது முறையல்ல, எங்கள்முன்னோர் பெண்பிள்ளைகளை வீட்டில் வைத்துப் பாடஞ் சொல்லிக்கொடுத்தார்களேயல்லாமல் பள்ளிக்கூடத்திற்குத்தானும் விடவில்லை. இப்படியெல்லாம் கூறிப்பார்த்தேன் கேட்டாளா? கலவன் பாடசாலையில் நல்ல படிப்பு, உபாத்தியாயர்கள் படிப்பிக்கக்கூடியவர்கள். பிள்ளைகளுக்குத்தேவை படிப்புத்தானே, பணம் சிறிது கூடுதலாகப் போய்விடும் என்று பயப்படுகிறீர்களா? அப்படியானால் என்னுடைய பெற்றோர் எனக்குத்தந்த காணிபூமியைவிற்று நான் தரமாட்டேனா? பணமும் பண்டமும் எதற்கு? பிள்ளை படித்து நாலுபேரறிய வளர்ந்து வந்தால் அல்லவோ நாயகனும் நல்லவனாய் வருவான் என்று ஒரு புராணம் படித்தாள், நானும் பிள்ளை சிற பராயந்தானே பாதகமில்லை என்று சம்மதித்தேன். இப்போது என்னவென்றால் பிள்ளைக்குச் சங்கீதம் படிப்பிக்க வேண்டுமாம், பரதநாட்டியம் கற்றுக் கொடுக்கவேண்டுமாம். அதற்கு ஒரு உபாத்தியார், பள்ளிக்கூடப் பாடம் வீட்டிற் சொல்லிக்கொடுக்க ஒரு உபாத்தியார். தையல் காட்டிக் கொடுக்க இன்னுமொருஉபாத்தியாயர். அதுமாத்திரமா, நான் வியாபார வேலைகளுக்கு வாங்கி வைத்துக்கொண்ட மோட்டார் இரதம், நாளுக்கு நூறு மைல் ஓட வீட்டில் என்ன எண்ணெய்க் கிணறுண்டா. சும்மா சொன்னாற் போதாதா? சமுத்திரச் சயிறு போட்டுக் கைகேயி நியாயம் பேசினால் எவன்தான் தாங்கமுடியும்? பிள்ளைகேட்டுப் பிடிவாதமாய் நின்றாலும் சரி, இவளுக்குத்தான் என்ன எனக்கில்லாத இந்த அபிமானம் என்று சுருக்கமாய்ச் சொல்லி முடித்ததும் முடியாததுமாய் மவுனமாயிருந்தார் சங்கரர்.

#### இல்லைப் பாருங்கள்!

இல்லைப்பாருங்கள் என்றுசொல்லிக்கொண்டு உள் வீட்டினின்றும் வெளி அறைக்கு வந்தாள் சங்கரர் மனைவி மாணிக்கவல்லி. திரும்பைத் தூணுக்கிவிட்டார். பிள்ளை படிக்க விருப்பப்பட்டால் பெற்றோர் வசதி செய்துவிடுவது வழக்கந்தானே. எங்களுக்கென்ன குறை? காணிபூமி யில்லையா? கடவுளே என்று காசு பணம் இல்லையா? நல்லூரான் தந்த நாலு பவுணதைப் பூட்டிவைத்துப் பூசை செய்யவா. அல்லது நான்தான் என்ன சொல்லிவிட்டேன், என்ன செய்துவிட்டேன். அடுத்தவீட்டு அக்கா மாணிக்கம் பஞ்சவர்ணக் கிளிபோல ஒரு குஞ்சை வைத்திருக்கிறாய்? நல்ல மான குரலாச்சே. நல்லாய் ஆரையாவது கொண்டு பாட்டுப் பழக்கிவிட்டால் குயில்போலப் பாடுவாளே பங்கஜம். இப்போது ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறதாமே பாட்டு பரதநாட்டியம் எல்லாம் கற்றுக்கொடுக்கிறார்களாமே. உங்களுக்கென்ன வில்லங்கமா? நல்லாய் அனுப்பிப் பழகவிடலாமே என்று ஒரு நாளுக்குப் பல நாளாகச் சொன்னா. நானும்பார்த்தேன்காலம் போகும் தாளத்திற்கு நாமும் ஆட வேண்டுந்தானே. இதில் என்ன நூதனம் என்று நினைத்து பிள்ளையின் தகப்பனாரைக் கேட்டது குற்றமாய்விட்டது.

என்ன அடுத்த வீட்டு அடுப்பங்கரை நியாயமா? என்று சொல்லிக்கொண்டு மறுபடி தொடங்கினார் சங்கரர்—வரும் பூதத்தம்பி எனக்குச் சினமும் சிரிப்புமாய் வருகிறது என்றுவிட்டுக் குலுங்கக் குலுங்க நகைத்தார். அதுதான் சரி, பெண்ணென்றாற் பேயும் இரங்கும் என்பார்கள், பெண்கள் என்றாற் பெருஞ்சிரிப்புத் தானாகவே வரும் தானே என்று தருணம் பார்த்திருந்த பூதத்தம்பி விஷயத்தை வேடிக்கையாய் முடிக்கப் பார்த்தார்.

அப்படியல்ல, எனக்கு அந்தப் பிரேதப் பெட்டிக்காரன கதையல்லவோ நினைவுக்கு வந்தது என்றார் சங்கரர்.

கதையிலே சமாளித்துவிடலாமென்று பூதத்தம்பியும் அதென்ன அப்படியான நகைப்பைத் தரும் கதை சொல்லுங்கள் பார்க்கலாம் என்றார். இப்போது வேண்டாம் என்று பழையபடி பேச்சை ஆரம்பிக்கத் தொடங்கின சங்கரரை மறுபடியும் பூதத்தம்பி கதையைப் பற்றிக்கேட்க, வேண்டாவிருப்பாகச் சொல்லுகின்றார் சங்கரர்,

'ஒரு போதிய மனிதன் ஒரு ஊரில் இருந்தார் நல்லாய் உழைத்து நல்லாய்ப் பணந்தேடி நாலு ஆறு பேர் தெரிய நாணயமாய் வாழ்ந்துவந்தார். ஊரில் ஒரு கண்ணியம். இருந்தாற்போல இருதயக் கோளாறும் இரத்தக் கொதிப்பும் அவரைத் தாக்கின. நோய் நாளுக்கு நாள் அதிகரித்தது. அவரை சுற்றத்தார் கவலைப்பட்டனர், அடிக்கடி வந்து வருத்தம் பார்த்துக் கொண்டு வந்தனர். சில நாட்களாய் நோய் சிறிது சிறிதாகக் குணமடைந்தது நோயாளி நல்லாய்ப் பேசி உலாவி வரும்போது, மனையாளை நான் வருத்தமாயிருந்தபோது ஆர் ஆர் வந்து பார்த்தார்கள்? எல்லாரும் வந்தார்களா? என்று கேட்டார். ஒருதர் தவறுமல் எங்களுடைய ஆட்களுஞ்சரி அயலாருஞ்சரி வந்தார்கள். ஆனால் ஒருவர்மாத்திரம் வந்து வீட்டு வாசலில் நின்றுவிட்டு ஒருவரோடும் கதைக்காமற் போய்விடுவார் ஆனா எனக்கு ஆர் என்று தெரியாது உங்கள் நண்பர்களில் ஒருவராக இருக்க வேண்டும் என்று மறுமொழி கூறினள் மனையாள். அப்போது அந்த மனிதன் தன் மூத்த மகனிடம் வந்தவரைப்பற்றி

தொடர்ச்சி 3-ம் பக்கம்)

---

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில்

## யாழ்ப்பாணம், ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச்சங்க

# 28-வது வருடாந்த விழா

### நிகழ்ச்சிக் கிரமம்

15-12-51 — சனிக்கிழமை

காலை : மணி 9-00—9-30

1. சென்ற வருடாந்தக் கூட்ட [அறிக்கை.
2. புதுவருட உத்தியோகத்தர் [தெரிவு.

அவைத்தலைவர்:
Dr. H. W. ஹவுஸ் அவர்கள்
இலங்கைக் கல்விப்பகுதித் தலைவர்

9-30—10.00 சங்கீதம்.

10-00—10-30
தலைவர் வரவேற்பு, வாழ்த்துப் பத்திரம்.

10-30—11-00
28-வது ஆண்டு ஆவேதனம், வரவுசெலவுக்கணக்குச் சமர்ப்பித்தல்.

11-00—11-30
தலைமைப் பேருரை.

11-30—12 00
தீர்மானங்கள்.

12-00—12-30
யோக்கியதா பத்திரங்கள், பரிசில்கள் வழங்கல். நன்றி கூறல்.

அவைத் தலைவர்:
திரு. சு. நடேசபிள்ளை அவர்கள்
பரமேஸ்வரக் கல்லூரி அதிபர்

பிற்பகல்

2-30—3-30 சங்கீதம்.

3-30—4-30
உபந்நியாசம்: "பாலைக்கலி உணர்ச்சியூட்டும் ஒரு வாழ்க்கைச் சித்திரம்"
பண்டிதர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மட்டக்களப்பு அரசினர் கல்லூரி.

4-30—5-00 சங்கீதம்.

5-00—6-00
உபந்நியாசம் : "செந்தமிழ்த் திறம்"
வித்துவான் க. வெள்ளைவாரணனார் அவர்கள் தமிழ்விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,

16-12-51 — ஞாயிற்றுக்கிழமை

காலை

9-00—10-00 சங்கீதம்.

10-00—11-00
பகவத்கீதை வெண்பா அரங்கேற்றம்.
பண்டிதர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை [அவர்கள்.

11-00—11.30
பட்டம் வழங்கல்.

11.30—12-30
உபந்நியாசம்:"தமிழ் ஆராய்ச்சித் துறை"
Dr. மா. இராசமாணிக்கம்பிள்ளை [அவர்கள்
தமிழ் விரிவுரையாளர், விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

பிற்பகல்

2-30—3-30 சங்கீதம்.

3-30—4-30 உபந்நியாசம்:
வித்துவான் க. வெள்ளைவாரணனார் அவர்கள்,

4-30—5-00 சங்கீதம்.

5-00—6-00
உபந்நியாசம்: 'சேக்கிழார்'
Dr. மா. இராசமாணிக்கம்பிள்ளை [அவர்கள்,
தமிழ்விரிவுரையாளர், விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

நன்றிகூறல்.

## இன்பத்தின் நிலை இதுதானு?

2-ம் பக்கத் தொடர்ச்சி

விசாரித்தளவில் அவர் அக்கிராமத்துக்கப்பால் பிரேதப் பெட்டி வியாபாரஞ் செய்யும் ஒருவர் என்றும் தெரிந்தது. என்ற கதையைச் சுருக்கமாய்க்கூறிவிட்டு மறுபடி சிரிப்பதும் சினப்பதுவுமாயிருந்தார் சங்கர். பின்னருஞ் சொல்லுவார், அடுத்தவீட்டு மனுஷிக்கென்ன அவ்வளவு அன்பு எங்கள் பிள்ளையில், தன்னுடைய மகன் பாட ஆடக்கூடிய குரலும் சரீரமும் உடையவன் என்று பள்ளிக்கூடத்தில் முதற் பரிசு பெற்றவன். தானுகப் பிரத்தியேகப் படிப்புக்கனுப்ப அவளால் முடியாது. எங்கள் பிள்ளையை அனுப்பச்செய்தால் அவளும்கூடித் துணையாகப்போகலாமென்று நாங்கள் கேட்போம். எங்கள் மோட்டார் இரதத்தில் போய்க் காரியத்தைப் பார்த்துவிடலாம், என்று தன்னை விருப்பில் எங்கள் பிள்ளையைக் குயில் என்றும் மயில் எனறுஞ் சொல்ல இந்தப் பெண் கேட்டுக்கொண்டு வந்து எனக்குச் சொல்லுகின்றுளே கதை என்று திரும்பக் கோபித்துப் பேசினுர் சங்கர். பிரேதப்பெட்டிக்காரன் அன்பு கோயாளி இறந்துவிட வேண்டுமென்றிருந்தது போல் அயல் வீட்டுக்காரி காங்கள் செலவு செய்து கடன்காரராகத் தான் அநுபவித்துவிடலாமே என்றதை இந்தப் பேதையறிந்திலன்! என்று வியாக்கியானஞ் செய்துவிட்டுப் பங்கஜத்தைக் கூப்பிடுகின்றுர்.

(தொடரும்.)

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தினம்

தெல்லிப்பழை
பாலர்ஞானேதய சபை

ஷெ தினம் கார்த்திகை மீ (22-11-51) 6ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல், தெல்லிப்பழை பாலர் ஞானேதய சபையாரால் காசிவிநாயகர் ஆலய மண்டபத்தில் சபைத் தலைவர் பிரம்ம ஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள் தலைமையிற் கொண்டாடப்பட்டது.

பிற்பகல் 4 மணியளவில் ஸ்ரீ காசிவிநாயகருக்கு விசேட ஆராதனைகள் நடைபெற்றபின் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் பேசுகையில் செந்தமிழும் சைவமும் நாடெங்கும் பரவச் செய்த வீரன் நாவலர் பெருமானே யென்றும், அப்பெரியாருடைய தினத்திலே அவரை நினைவுகூர்ந்து அவர் காட்டிய நன்னெறிப்படி நடக்க வேண்டுமென்றும் கூறி, இன்னும் அவருடைய போதனைகளையும் சபையோர்க்கு விரித்துரைத்தார்கள்.

அதன்மேல் செல்வன் இ. சிவானந்தம், செல்விகள பொ. பொன்மணி, சி. திலகவதி என்போர் நாவலரின் இலட்சியங்களை எடுத்துரைத்தார்கள். கூட்டம் மாலை 7 மணியளவில் தேவாரத்துடன் பூர்த்தியாயிற்று.

## ஒரு ஆளுக்கு 57 உணவுப் பிரமாணப் புத்தகம்

பெலியகொடவத்த என்னும் இடத்தில் வசிக்கின்ற சினின் சோனு என்னும்பெண் 57 உணவுப் பிரமாணப் புத்தகங்களை (Ration Books) வைத்திருந்தனராம்.

அதற்குத் தண்டனை ரூ 500 விதிக்கப் பட்டது.

## விளக்கீடு

விளக்கீடு என்பது விளக்கு இடுதல் அல்லது விளக்கு ஏற்றுதல். இந்த விழா, திருக்கார்த்திகை நாளில் நிகழ்வது.

இங்கே ஏற்றப்பெறுகின்ற விளக்கு, சிவபிரான் சோதி வடிவினராய், பிரம விட்டுணுக்களுக் கிடையே தோன்றியருளி, அவர்களுக்கு அருள் சுரந்ததைக் குறிப்பதாகும்.

பிரமா படைத்தற் கடவுள். விட்டுணு காத்தற் கடவுள், இரு தொழில்களும் ஏற்றத்தாழ்விறந்து இன்றியமையாதன. இன்றியமையாமை ஒன்றையே உற்றுநோக்கிய பிரம விட்டுணுக்கள் தங்கள் பெருமையை உன்னித் தருக்குற்றுத் தாமே தனி முழுமுதற் கடவுளென கர்வத்தால் வாதாடிச் சமர் செய்தனர்.

இவர்களுக்கிடையே சிவபிரான் ஒளிமலையாய்த்தோன்றியருளினர், மலையின் அடிமுடி தேட முயன்று வருந்தினர் பிரம விட்டுணுக்கள். இவ்வாறு தருக்கிழந்த நிலையில் இவர்களுக்கு அறிவொளியூட்டி அருள் சுரந்தனர் முழுமுதற் பெருமான்!

எத்தொழிலை நாம் செய்யினுமேனினும், எந்த உயரிய பதவியை நாம் வகிக்கின்றோமெனினும், "அவையே தானே யாய்" என்றபடி சிவபிரான்உயிர்க்குயிராய் நின்று இவற்றைச் செய்தருளுகின்றுர் என்னும் உண்மையை உள்ளத்திருத்தி ஒளி நெறிக்கண் ஒழுகவேண்டும் என்பதே இது உணர்த்தும் பொருள். "அவனன்றியோ ரணுவு மசையா தெனும பெரிய ஆப்த மொழி ஒன்று கண்டாய்...... எவர் பெரியர் எவர் சிறியர் பாதமுனையன்றி உண்டோ" என்னுந் தாயுமான சுவாமிகள் தோத்திரம் இதனை மேலும் வலியுறுத்தும்.

## மூன்ருவது உலக யுத்தம்

பிரித்தானிய பிரதமராய்ச் சேர்ச்சில் வருவதும், பாகிஸ்தான் பிரதமர் கொலை செய்யப்படுவதும், முக்தியே கூறிய இந்திய சோதிட வல்லுநர் இந்துமதி பண்டிற் என்னும் அம்மையார் அடுத்த ஆண்டில் மூன்றும் உலக யுத்தம் உண்டாகுமென்று கூறுகின்றனர்.

## தங்கத் தொழிலாளர் ஐக்கிய சங்கம்

தங்கத் தொழிலாளர் ஐக்கிய சங்கம் ஒன்றை அமைத்தற்கு அரசாங்கக் கைத்தொழிற் பகுதியார் வேண்டியன செய்கின்றனர்.

இது இவர்களுக்குக் கஷ்ட நிவாரணமும் சிறந்த நகை ஆக்கக் கல்வியும் அளிக்குமென அறியவருகிறது.

## சலனவண்டி ஒட்டுதற்குப் பொய்த் தராதரப் பத்திரங்கள்

சலனவண்டி (Car) ஓட்டுவோர் பலர் பொய்த் தராதரப் பத்திரங்கள் வைத்திருப்பதைப் பொலீசார் கண்டுபிடிக்கின்றனர் இவர்கள் தொகை ஏறக்குறைய ஈராயிரமாயிருக்கலாமென்று அனுமானிக்கப்படுகின்றது. எனவே தராதர விண்ணப்பப் பத்திரங்கள் கடைப் பொருட்கள்போல் விலைப்படுகின்றன என்பது நூதனமல்ல.

## அடுத்த பிரதமர் திரு பண்டாரநாயகவே

அநுராதபுரத்திலே நடக்கவிருக்கின்ற சிராமச் சங்கங்களின் பொதுக் கூட்டத்தின் தலைவராகிய திரு. P. B. ராஜகுரு அவர்கள், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையேயுள்ள பிணக்கை யொழிப்பதற்கு அப்பொதுக் கூட்டத்திலே ஓர் பிரேரணை கொண்டுவருகிருர்.

இதன் பயனுக, குறித்த கட்சித் தலைவர்களாகிய திரு. சேனநாயக பண்டாரநாயக ஆகியவர்களுக்கிடையே நேசமனப்பான்மை உண்டாக்கி, அடுத்த அரசாங்க அமைப்பிலேதிரு சேனநாயக அவர்கள் தலைமைத் தேசாதிபதியாக, திரு பண்டாரநாயக பிரதம மந்திரியாதற்கு உழைக்க வேண்டுமென்பதாம்.

## அம்மை நோய்

வல்லுவெட்டித்துறையில் அம்மைநோயாளர் தொகை 15 ஆகிவிட்டது. பாதுகாப்பு முறைகள் தொடர்ந்து கையாளப்படுகின்றன.

## சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம்

### மீண்டும் "கல்கி"யே தலைவர்

சென்னை தமிழ் எழுத்தாளர்சங்கத்தின் தலைவர், கல்கி ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி 1952-ம் வருடத்திற்கும் சங்கத் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பெற்றுர்.

## இந்திய எருத்துக்கள்

கடந்த மகா யுத்தத்துக்குப் பின் இவ்வருடத்தில் இரண்டாம் முறையாக 50 சோடி இந்திய எருதுகள் இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவ்வெருதுகள் கடந்த சில வார காலமாக ஊர்காவற்றுறையிலுள்ளதொற்றுநோய்ப் பரிசோதகர் நிலையத்தில்நிற்பாட்டப்பட்டுள்ளன.

கேற்றைபத்தினம் ஊர்காவற்றுறையில் இருந்து புறப்பட்டுக் காரைநகர் மார்க்கமாகக் கொண்டு செல்லப்பட்டன.

## ம. வே. திருஞானசம்பந்தப் பெருந்தகையா

நாலுபத் தாண்டுகளாய் *நங்கைக்கு நல்லுரைகள்
சாலச் சிறப்புடனே செப்பிய — சீலனே!
செய்ய திருஞான சம்பந்த அண்ணலே!
வையமெலாம் போற்றநீ வாழி.

* நங்கை — இந்துசாதன நங்கை

## இந்து ஆலய பரிபாலனச் சட்டம்

### நிறைவேற்றப்பட வேண்டும்

சப்ததீவு இந்துமகாசபாவின் காரியநிருவாக சபைக்கூட்டம் புங்குடுதீவில் கூடியது. அச்சமயம் இந்துஆலய பரிபாலன அறநிலையச் சட்டத்தைக் கூடிய சீக்கிரத்தில் சட்ட பூர்வமாக அரங்கேற்றி வைக்குமாறு பிரதம மந்திரியாரையும் உள்நாட்டுக்கிராம அபிவிருத்தி மந்திரியாரையும் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. சட்டமியற்றுவதை எதிர்ப்போர் ஓர் சிறு தொகையினரான கோவில் முகாமைக்காரர்களும் அவர்களைச் சேர்ந்தோருமே யன்றி, அகில இலங்கையிலுள்ளபெரும்பான்மையினரான இந்துக்கள் சட்டமியற்றுவதை வரவேற்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டப்பட்டது.

இதுவிஷயமாக காரியதரிசியை, மேற்படி இரு மந்திரிமார்களுக்கு எடுத்துகாட்டுவதற்கு ஓர் தூதுக்கோஷ்டியை ஒழுங்கு செய்யுமாறு தீர்மானிக்கப்பட்டது என கௌரவ காரியதரிசி வி. கார்த்திகேசு அவர்கள் தெரிவிக்கின்றுர்.

## நேருவுடன் சாதுபோட்டி!

அரசாங்க சபைத் தேர்தலுக்குப் பண்டித நேருவுடன் ஐவர் போட்டி யிடுகின்றனர். இவர்களுள் ஒருவர் சாது பிரபுதத் பிரமசாரி என்பவர். இந்து மத சட்டம் முன்னேருதென நேரு அவர்கள் வாக்களிப்பரேல் இவரது போட்டி பின் போகும்.

## நாவலர் நினைவு விழா

நிகழும் கார்த்திகை மாதம் 22-ந் திகதி (8-12-51) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நாவலர் வித்தியாலயத்தில் திரு. C. நாகையா B A. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'நாவலரின் மாண்பு' என்னும் பொருளில ஆசிரியர் K. சின்னையா அவர்களும் "நாவலர் காட்டிய வழி" என்பதில் வித்துவான் க. சுப்பையபிள்ளை அவர்களும் பேசினர். வார்கள்.

பண்டிதர் சங்கரப்பிள்ளை அவர்களால் நாவலர் சரித்திரம் கதாப் பிரசங்கம் செய்யப்பட்டது.

## அரசாங்கச் சலன வண்டிகள்

### மந்திரிகள் உபயோகத்தடை

அரசாங்கச் சலன வண்டிகளைத் (cars) தேர்தல் முயற்சிகளுக்கு உபயோகிக்கக் கூடாது என்னும் விதியை இந்திய அரசாங்கமந்திரிகள் தாமே உண்டாக்கிஒப்புக்கொண்டனர். அது அங்கே.

## தீப்பெட்டி விலை

பெட்டிக்கு ஒன்றரைச் சதவிதம் தீப்பெட்டி விலை கூட்டுதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்கின்றது. இரசாயனப் பொருள்விலை கூடுதல் இதற்குக் காரணமென அறிய வருகிறது. இவ்வாறு விலைகூடும் நிலைமைகளைக் குறைத்தற்கு அரசாங்கம் முயல்கின்றது என்பது ஓர் சமாதானமாகும்.

## காகித உற்பத்தி

1952-ம் ஆண்டு பங்குனிமீ வாழைச்சேனையில் காகித உற்பத்திச்சாலை அமைக்கப்படும். இதற்கு வேண்டிய ஆரம்ப முயற்சிகள் இப்பொழுதே தொடங்கிவிட்டன.

## நீரில் மூழ்கிய பெண்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ராசம்மா என்னும் 35 வயதுடையபெண் வெல்லைக்குளத்தில் நீராடுகையில் மூழ்கித்தத்தளிக்கும் சமயம் சுங்க காவலில் சிப்பந்தியாக வேலை செய்யும் திரு. செல்லையா என்பவர் கண்டு உடனே குளத்துட் குதித்து நீந்திச்சென்று குறித்த பெண்ணைக் கரைக்குக் கொண்டுவந்துசேர்த்தார். உடனே ஆரம்ப சிகிச்சைகள் செய்த பின் பெண் அபாயம் எதுவுமின்றி சுகமடைந்தார்.

## பந்தயக் குதிரையின் பரிதாப மரணம்

பந்தயக் குதிரைப் பயிற்சியாளரான மேதிஹூ—லேனுடைய குதிரைப் பாதுகாப்பு நிலையத்தி லிருந்து சனிக்கிழமை இரவு கட்டை அவிழ்த்துக்கொண்டு வெளியே ஓடிய "கிருஸ் ஒப் கோல்ட்" ஸிறிப்போர்ட் பிளேஸிலுள்ள ஒரு பெரிய பள்ளத்தாக்கில் விழுந்து இறந்து விட்டது. அந்தக்குதிரை ரூபா 10 ஆயிரமாக விலைக்கு வாங்கப்பட்டதாம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் இல 7157.

ஊர்காவற்றுறை, சரவணை,
ஐயம்பிள்ளை சன்னதயா,
வழக்காளி.

எதிராக

ஊர்காவற்றுறை, சரவணை
1. இராமலிங்கம் பொன்னையாவும்
2. பெண் பொன்னுச்சிப்பிள்ளையும்
3. வேலணை, கார்த்திகேசு மகள் பெண் செலலம்மா,

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 7157-ம் இலக்க வழக்கில் எனக்கு இடப்பட்ட கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்பட்ட காணி 1952-ம் ஆ. தைமீ 12-ம் உ சனிக்கிழமை (தமிழுக்கு கர வரு மார்கழிமீ 28-ம் உ) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— ரூபா 605-ம் இன்னும்ரூபா 350க்கு 1950-ம்ஆ ஐப்பசி மீ 5 ம் உ தொடக்கம் 1950-ம் ஆ கார்த்திகை மீ 30-ம் உ வரை பத்து வீதம் வட்டியும், அதன் பின்பு முழுத்தொகைக்கும் 1950-ம் ஆ கார்த்திகைமீ 30 ம் திகதி தொடக்கம் இறுக்கும் வரை ஐந்து வீதம் வட்டியும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி, வேலணைக் கோயிற்பற்று, வேலணை கிழக்கு இறை "மானன்கவாலை" செற்பரப்பு பதினறு (16) கிணறும், வீடும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு சின்னையா பெண் தங்கம்மாவினுதனம், வடக்கு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ஆதனமும் சோமசுந்தரம் பெண் அன்னம்மாவினுதனமும், மேற்கு முருகேசு மகள பாக்கியலெட்சுமியினுதனம், தெற்கு தில்லைநாதர் பெண் செலலம்மாவின் உரிமைக்காறரினுதனம். இதடங்கலும்.

பொன்னம்பலம் அப்பையா,
கொம்மிஷனர்,

கொக்குவில் கிழக்கு
10—12—1951.

M 151 11—12—51.

# கூட்டுறவைக் குலைக்கும் குழு அமைப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும் என்ற கொள்கை பரவியுள்ளது வேறு நாட்டில் உள்ள தத்தம் தேசிய இனத்தைக் காக்கவும், அவரவர் முற்படுகின்றனர். அங்கு அங்கு உட் கலகங்கள் தோன்றுவதனைச் சொல்லவும் வேண்டுமா? போலந்தில் இத்த ஜர்மானியர் இவ்வாறு ஓர்குழுவாகி ஜர்மனி நாட்டோடு ஒத்துழைத்துப் பெரும்போர் குவித்திட்டதனை உலகம் அறியும். இத்தகைய குழுக்கள் ஐந்தாம்படையாய் நாட்டினைக் கவிழ்க்க முயல்வது இயல்பேயாம். தேசிய இனக் கலையன்றி வலிமை பெற்ற குடும்பங்களும் வாளேந்தி நாட்டினைச் சிதைப்பது உண்டு. கல்ப் என்றும் கிபலின் என்றும் விளங்கிய இரண்டு குடும்பத்தினர் வாளேந்தி இத்தாலிய நாட்டினைச் சிதைத்ததனை வரலாறு கூறுகின்றது.

ஆதலின் இயற்கையாக எழுகிற கூட்டுறவில் வளரும் நிலையங்கள் இவ்வாறு பகைத்து நின்று போராடாதவாறு தடுத்தல் நாட்டின் கடமையாகும். இவை முளையிலேயே தற்கே இடம் தராது காக்கும் நாடே நாடாம். போட்டி மனப்பான்மை போரில்தான் சென்று முடியும். பள்ளியிலும் விளையாட்டிடங்களிலும் இன்று போட்டி மனப்பான்மையையன்றோ வளர்த்து வருகின்றோம்? இது தீர கூட்டுறவு மனப்பான்மை வளர்த்து வருகிற புத்தகங்களைப் படைக்கவேண்டும்

பல் குழுவாக நிற்பவர் தம் இனவெறியை இனத் தனிநெறியாக உயர்த்திப் பேசுதல்கூடும். மதவெறியையும் மதப் பெருநெறியாகச் சிறப்பித்துப் பாராட்டிக்கொள்ளுதல்கூடும். ஆதலின் இவை மறைந்திருந்த சதி செய்யவேண்டுவதில்லை. தடுப்பதற்கு நெருப்பை மறைப்பானேன்? ஆனால் சிறிது அமர்ந்தால் பொறி பறந்து வீட்டின் கூரையையும் வற்றியவனையும் பொசுக்கிச் சாம்பலாக்கும். அவ்வளவே ஆனால் வேறு சிலர் இவ்வாறு வெளிப்படையாக அன்றித் தலைமறைந்தே வாழ்ந்து பகைமையை வளர்த்துக் கொண்டே வருவர். உடன் உறையாநின்றே பாழாகச் செய்யும் உட்பகை என்று பரிமேலழகர் பொருள் கூறுகின்றார், உட்பகையாவது ஆறலைப்பார், கள்வர், குறளை கூறுவர், முதலிய மக்களும், பன்றி, நரி, முதலிய விலங்குகளுமே என்பது அவர் கூறும் விளக்கம். நாட்டுக்குக் கேடு வருவகையை இந்த விளக்கம் தெளிவுறுத்தினாலும் உட்பகையின் நுட்பத்தினை இது தென்னத் தெளியப் புலப்படுத்தவில்லை எனலாம். விலங்கு முதலியவற்றை இங்குக் கொண்டுவர வேண்டிய கட்டாயமும் இல்லை. நாட்டுத் தலைவர்களாயினும் அதிகாரியாயினும் நாட்டினை உட்பகையாக இருந்து கெடுப்பர் என்று பரிப்பெருமாள் கூறுகின்றார். இங்கு அடிப்படையாகத் மறைந்தில்லு நாட்டிற்குக் கேடுசூழு சதியாலோசனையேயாம். தலைமைப் பெரும் புகழினை வேண்டியோ அதிகாரத்தினை வேண்டியோ இந்த உட்பகை எழும் என்பதனையே பரிப்பெருமாள் வற்புறுத்துகின்றார் எனலாம். இப்படிச் சூழ்ச்சி செய்வார் அரசுக்கு நல்லவர்போல வெளியே காட்டிக்கொண்டு உள்ளுக்குள்ளாக பகைமை பாராட்டி நாட்டினைக் கெடுக்கக் காலம் பார்த்திருப்பவர் என்பது பரிமேலழகர் உரையால் தெளிவாகின்றது. இவையெல்லாம் ஆண்டனை வரலாறுகளேயாம். இன்று உலகில் காட்சியளிக்கும் உட்பகைகள் ஆண்டனை சூழ்ச்சிகளல்ல. ஜிஹாங்கீரை ஷாஜஹான் சிறையிட்டுப் பட்டத்துக்கு வருவதும், ஷாஜஹானைச் சிறையிலிட்டு ஔரங்கசீப்பு பட்டத்து வருவதும் ஒக்கத சொலவிகளின் பழைய வரலாறு. இன்று உட்பகையாக இருப்போர் தம் கொள்கையை வெளியிட இடம் இன்றித் தலைமறைவாக இருந்து புரட்சிசெய்ய விரும்புவோராம். தவிர பதுங்கியிருப்பவர்போல இவர்கள் தலைமறைவாக நிற்கின்றனர். எப்படியேனும் குழப்பத்தினை உண்டுபண்ணி அக்குழப்பத்தில் தம் கருத்தினை முடித்துக்கொள்ள முயலும் இத்தகைய உட்பகையினர் குழப்பத்தினை உண்டுபண்ணி நாட்டினை அழிக்க முற்படுவர். இவர்களது அச்சவேலை ஒன்றிருந்தால் அது அழிவு வேலைக்குப் பின்னர்தான் தோன்றுதற் கூடும். கலை பிறக்குவதே முதற் பணி என்று இவர்களைப் பாராட்டிப் பேசிக்கொள்வர். ஆதலின் இத்தகைய சூழ்ச்சியின் அடிப்படை குழப்பத்தினை விளைவிக்கும் அழிவு வேலையே என்பதனைத் திருவள்ளுவர் 'பாழ்செய்யும் உட்பகை' என்ற தொடரால் சுருக்கக் கூறி விளக்கவைக்கின்றார்.

பல் குழு என்பதும் உட்பகை என்பதும் வெவ்வேறு என்பது இதுவரை கூறிவந்த கருத்து. பரிதியார் கருத்து இதுவன்று. தவரோ இவை இரண்டும் ஒன்றே என்று பொருள் கொள்கின்றார். பல்குழுவினையும் பாழ்செய்யும் உட்பகை என்பது அவர் கூறும் பொருள். சமுதாய வாழ்வினராகப் பல பல வகையில் தொண்டாற்றும் பலபல குடும்பங்களைப் பலபல நிலயங்களைப் பகைத்து நிற்கப்பண்ணி அவற்றினைப் பாழாக்குவதே உட்பகை என்பது அவர் கருத்து. வெளிப்படையாகத் தொண்டாற்றித் துணைசெய்பவை அந்த நெறி பிறழ்ந்து முன் சொல்லியபடி கெட்டு நிற்பதே உட்பகையாம்; அப்போது வெளிப்படையாக அன்றித் தலைமறைந்து நின்றன்றோ தம் சூழ்ச்சியை முடித்தல் வேண்டும்? உட்பகையால் சமுதாயவாழ்வு குலைவதனை இந்த உரை நன்கு விளக்குகின்றது.

இத்தகைய உட்பகை வளர இடந்தராத நாடே நாடு. தத்தம் கொள்கைகளை எடுத்து விளக்க இடந்தராதபோது இத்தகைய உட்பகைகள் தலைமறைந்து நின்று புரட்சி செய்வது இயல்பேயாம். இப்புரட்சிகள் செழித்து வளர்வது பசியும், பிணியும், பகையும் எருவாகக் கொண்டே எனக் கண்டோம் அது எருவேகிடையாதபடி செய்ய வேண்டும். தத்தம் கொள்கையினை வெளிப்படையாக விளக்க உரிமையும் தருதல் வேண்டும், இவற்றிற்கு எல்லாம் அடிப்படையாக நாடு நல்லாட்சிபெற்று ஓங்க வேண்டும்.

மூன்றாவது வேந்தலைக்கும் கொல் குறும்பாம் அளவு வந்தால் வேந்தனை அலைக்கும் கொல்வினைக் குறும்பர் என்று பொருள் கூறுகின்றார் பரிமேலழகர் நாடுபற்றி வாழும் பெருநெறி வேந்தனைக் காடுபற்றி நிறச்செய்யும் கொல்வினைக் குறும்பு என்பது காலிங்கர் தரும் விளக்கம்; உண்மையில் இவர்களே அதிகாரம் பெற்று வாழ்ந்த காலம் வரும்போது அரசனைக் காலைத் தட்டி முடி வீழ்த்துவோர் எனலாம். இத்தகைய வஞ்சகர்களே அல்லாமல் பாளையப்பற்றுகளாய்த் தனித்தனிப் படைகளைத் திரட்டி அரசருக்கு உதவுவோராய் நிற்போரும் இவ்வாறு காலம் வந்தபோது அரசரையும் எதிர்ப்பர் எனலாம். ஆதலின் பிரிவினை மனப்பான்மையாம் பெரும்பேயினை ஓட்டவேண்டும் படையனைத்தும ஓரதிகாரத்திற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும், இல்லையானால் இரண்டுபட்டு நாடு அழியும். நாடு ஒருமுகமாக அனைத்தினையும் விழுங்கும் பெரும் பூதமாகாது பலமுகப்பட்டு உரிமையைப் பல துறையிலும் வளர்த்து நாடு முழுதும் அவ்வவ்விடத்ததற்கும் மக்களுக்குத் தக்கவாறு பல வேறு நிலையில் சிறந்து திகழவேண்டும். தொழில், உழவு, கல்லூரி என்பவை ஒரே இடத்தில் திரண்டு பேய்க்காடாகும். பல பல வகையில் தனி இடங்களில் பல்கி ஓங்கி உயர வேண்டும். ஆனால் படையினை இவ்வாறு பலமுகப் படுத்தினாலும் அதனை அடக்கியாளும் அதிகாரத்தினைப் பலமுகப் படுத்தாது ஒருமுகப் படுத்தியே அமைக்க வேண்டும். ஓர் நாட்டினைச் சீர்கேடாக்கிச் சிதைக்க இடமில்லாதபடி பலமுக அமைப்போடு ஒருமுக நடுவிட அமைப்பும் இன்றியமையாது வேண்டப்படும். இதுக் கொலையே அக் குறும்பரின் இயல்பு என்று சுட்டத் திருவள்ளுவர் கொல்குறும்பு என்று பாடுகின்றார். படையின் செருக்க வெறியாக முற்றினால் கொலையே முடிவாகும். இவ்வாறு கொன்றலைத்து மேல் மேல் வந்த வரலாற்றைப் பாளைய பற்றுக்கள் இருந்த தென்னாட்டிலும், வடநாட்டிலும் மேனாட்டிலும் காணகிறோம்.

இந்தப் படைப்புரட்சி பழைய வரலாறு. வேந்து என்பதற்கு அரசன் என்று பொருள் கொள்ளாமல் சொல்லிருந்த போக்கிலேயே "அரசு" "நாடு" என்று பொருள் கொள்ளவும் கூடும் அன்றோ; எனவே நாட்டினை அலைக்கழிக்கின்ற வரலாறு இன்றும் நடப்பதன் வரலாறேயாம். இந்தக் குறள் கூறும் மூன்றினையும் தனித்தனியாகக் கொள்ளாது மூன்று வளர்ச்சி நிலைகள் என்றும் கொள்ளலாம். சமுதாய வாழ்வின் அடிப்படையாக எழும் கூட்டுறவு நிலையங்கள் இனவெறியாலும், மத வெறியாலும் (மதம் என்பது நாம் முன் குறித்ததுபோலப் பல அரசியற் கொள்கைகளையும் பொருளாதாரக் கொள்கைகளையும் குறிக்கிறது) பல பல குழுவினராய்ப் பகைத்து நிற்கும் இது கேட்டின் முதல் நிலை. இக்குழுக்கள் சேர்ந்தோர் தம் வெறியில் மயங்கிப்பெரும் அதிகாரமும் என்ற பேய்கள் பிடர்பிடித்து உந்தப் பெருங் குழப்பத்தில் நாட்டினைப் பாழ்படுத்தித் தலைமறைவாக நிற்கும் நிலை இரண்டாம் நிலையாம் காலம் வாய்த்தபோது தடைகளை எல்லாம் கொன்று குவித்து அரசினைச் சிதைக்கும் நிலை மூன்றும் நிலையாகும். வாழ்வே நாட்டின் நோக்கம், கொலை அதற்கு எதிர்மறை இன்றைய இரத்தப்புரட்சிக் கொள்கைகள் இக் கொலையில் திளைப்பனவாம். அடக்கு முறைக்கு ஏற்ப இவை பல்கிப் பெருகுகின்றன. காந்தியடிகள் அறப்புரட்சி வழியில் வெற்றி காண்பதற்கு முன் மறப்புரட்சியாம் கொலைப்புரட்சி ஒன்றே உலகிற்குத் தெரியும். ஆதலின் இன்று எங்கு பார்த்தாலும் தத்தம் கொள்கையை நிலைநாட்டப் பலபல குழுவினரும் உட்பகையாய் வளர்ந்து காலங்கிடைத்தபோதெல்லாம் எதிரிகளைக் கொன்று வருகின்ற காட்சியை எங்கும் கண்டு வருகின்றோம். பர்மாவின் முதலமைச்சர் சுட்டுக் கொல்லப்பட்டார். காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார். அரபி அரசர் சுட்டுக் கொல்லப்பட்டார். பாகிஸ்தான் முதலமைச்சரும் சுட்டுக் கொல்லப்பட்டார். துப்பாக்கி அரசியல் கொள்கை என ஜவாஹர் இதனைக் கடிந்துரைக்கின்றார். இந்தப் புது உலகம் குண்டுகண்டு வெற்றி வெறிகொண்டால் புரட்சியாளரும் குண்டுகண்டு வெற்றிபெற முயலுவது இயல்பாகிறது. அறத்தில் ஓங்கி அன்பில் செழித்து உரிமை வழுவாய் வளங்கொழிக்கும் நாட்டில் மட்டுமே இந்தக் கொல்குறும்பு - ஆம் - துப்பாக்கி அரசியற் கொள்கை வளராதிருக்க முடியும். அதனைக் காந்தியடிகளைப் பின்பற்றி உலகம் நிலைநாட்ட வேண்டும், என்ற உடன்பாட்டு உண்மையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் திருவள்ளுவர் எதிர்மறை முகமாக இந்தத் திருக்குறளில் கூறியருளுகின்றார்.

—திருவள்ளுவர்.

## அம்மை நோயால் மரணம்

வல்லுவெட்டித் துறையில் அம்மைநோயால ஒருவர் இறந்தார். நோய் அடங்கவில்லை. பாதுகாப்பு முறைகளை அரசாங்கம் ஆளுகின்றது.

## காகித நெருக்கடி

1951-ம் ஆண்டிலும் பார்க்க 1952-ம் ஆண்டில் காகித உற்பத்தி அதிகரிக்குமாகையால் வருகிற ஆண்டில் காகித நெருக்கடி குறையும் என்று கனடா காகித உற்பத்தியாளர் கழகம் கூறுகின்றது.


**யாழ்ப்பாணம ஐக்கியலாபநிதி**

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை,

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



திறமான **தேக்க மரங்கள்** பல தினிசுகளிலும்

திறமான **ருணிமாக்ஓடுகள்** 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

தங்கமாளிகை
ஜூவல்லர்ஸ்

நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Tuesday, December 11, 1951.